தென்றல்
காதலும்
ஆராய்ச்சி
கவிதை
ஜெயா...

ஓலம்! ஒப்பாரி!

"தி. மு. கழகப் பிரசாரத்துக்கு மக்கள் இடம் தரவேண்டாம்."

—காமராசர்

"அடுத்த தேர்தலில் தி. மு. கவை முறியடிப்போம்."

—வெங்கட்ராமன்

"தென்னாட்டைப் புறக்கணிப்பதாகக் கூறுவது தவறு. எல்லாப் பிரதேசங்களும் சமமாகவே நடத்தப்படுகின்றன. பொதுமக்கள் அடுக்கு மொழிகளைக் கேட்டு ஏமாறக்கூடாது."

—டி. டி. கே.

"15 ஸ்தானங்கள் கிடைத்து விட்டதற்காக தி. மு கழகத்திற்குத் தலைகால் தெரியவில்லை. என்னென்னமோ பேசுகிறார்கள். ஜனநாயகத்தில் எதிர்க்கட்சி எப்படியிருக்கவேண்டும் என்பதே அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் அரசியலில் குழந்தைகள். ஞான சூன்யங்கள். தாறுமாறுகப் பேசுகின்றனர்."

—பக்தவத்சலம்

"நாளை சட்டசபை ஆரம்பமாகிறது. அறிஞர், அன்பழகன், ஆசைத்தம்பி, கருணாநிதி முதலியவர்கள் உள்ளனர். அவர்களை முதல் தடவையாக நாளை பார்க்கப் போகிறேன். அவர்கள் போட்ட போட்டிலே யார் பதில் சொல்ல முடியும் என்று மக்கள் சந்தேகப்படலாம்: அடுக்குமொழிப் பேச்சுகளுக்குப் பதில் கூற இதோ தயாராயிருக்கிறோம் என்பதைச் சகோதரிகள் அழகான தமிழில் பேசி, தங்கள் பேச்சுத் திறனை நிரூபித்தனர்.

— சி. சுப்ரமணியம்

இந்த 'அருங்கருத்துக்களை' கடந்த 28-4-57 அன்று மாலை சென்னை கடற்கரைக் கூட்டத்திலே காங்கிரசுக்காரர்கள் கூறியிருக்கிறார்கள்.

பொதுவாக, உலக வரலாற்றில், பலமற்ற ஒரு கட்சி, பலம் நிறைந்த மற்றொரு கட்சியைக் கண்டு பயப்படுவதும், அதைத் திட்டிப் பேசுவதும், குறை கூறுவதும் இயல்பு. ஆனால், இங்கு, நேர்மாருக நடைபெறுகிறது. ஆள்பலம், பணபலம், அதிகாரபலம் அனைத்தையும் தன்னிடம் வைத்துக்கொண்டதோடு மட்டுமல்லாமல், ஆட்சியை ஆளும் பலத்தையும் தன்னிடம் கொண்டுள்ள காங்கிரசுக் கட்சி, பலமே இல்லாத தி. மு. கழகத்தைக் கண்டு பயப்படுகிறது-தாக்கிப் பேசி வருகிறது. இந்தப் பேச்சு அரசியல் தைரியம் கொண்டவர்களின் பேச்சாக இருக்கமுடியாது. அரசியல் ஊஞ்சலிலே காங்கிரசுக்காரர்கள் அச்சத்துக்கும் ஆணவத்துக்கும் இடையே ஆடிக்கொண்டிருக்கிறார்கள். வியாதியின் கோளாறு, அவர்களது மனதிலே நிறைந்துவிட்ட பயத்தை வாய்வழியே வெளிவரச் செய்கிறது. அதன் காரணமாகத்தான் கடற்கரையிலே அவர்கள் ஊளையிட்டிருக்கிறார்கள் கனைத்திருக்கிறார்கள், ஓலமிட்டிருக்கிறார்கள். ஒப்பாரி வைத்திருக்கிறார்கள். இந்த ஒரு நிகழ்ச்சி தி. மு. கழகத்தின் உண்மையான வளர்ச்சியை உரிய முறையிலே தெரிவிக்கிறது. தேர்தலில் கலந்துகொள்ளாத போதும் சரி, தேர்தலில் கலந்துகொண்ட பின்னும் சரி தி. மு. கழகம் வளர்ச்சியடைந்துதான் வருகிறது என்பதை இந்த அரசியல் கோழைகளின் வார்த்தைகள் நிரூபித்து வருகின்றன.

தி. மு. கழகக்காரர்கள் குழந்தைகள் என்றும் பதினைந்துபேர் வந்ததாலே அவர்களுக்கு தலைகால்தெரியவில்லை என்றும் பக்தவத்சலம் சொல்கிறார். அவர் குறுகிக் கூனி, குவலயம் தெரியாதவராக இருக்கிறார் என்பதை அவரது வாசகமே நிரூபிக்கிறது. ஆணவத்தினாலும், சரி, அச்சத்தினாலும் சரி, தலைகால் தெரியாமல் திரிந்தவர்கள்-திரிபவர்கள் காங்கிரசுக்காரர்கள்தான். இதே நேரத்திலே "அடுத்த தேர்தலில் தி. மு. க.வைத் தோற்கடிப்போம்" என்று புதிய அமைச்சர் வெங்கட்ராமன் ஓலமிட்டிருக்கிறார். தி. மு. கழகம் ஏதோ 150 ஸ்தானங்களை அடைந்துவிட்டதாகவும், காங்கிரசுக் கட்சி 15 ஸ்தானங்கள் மட்டுமே பெற்றிருப்பதாகவும் கற்பனை செய்துகொண்டு, அந்தக் கற்பனையை எண்ணி எண்ணி நடுங்கிக்கொண்டு, அந்த நடுக்கத்திலே தி. மு. க வின் மீதுள்ள கோபத்தை வாய்வழியே கதறியிருக்கிறார். முதல் முறையிலேயே தி. மு. கழகத்தவர் பதினைந்து பேர் வந்துவிட்டார்களே, அடுத்த தேர்தலில் இன்னும் எத்தனைபேர் வந்துவிடுவார்களோ என்ற பயத்தைத்தான் அவரது வார்த்தைகள் பிரதிபலிருத்திக்கின்றன.

ராஜாத்தி குஞ்சிதபாதம் போன்ற சில காங்கிரஸ் பெண் எம். எல். ஏ.க்கள் பேசிய பேச்சை வைத்துக்கொண்டு, "எங்களுக்கும் அடுக்குமொழி" வந்துவிட்டது என்று அலறியபடி தெரிவித்திருக்கிறார். அமைச்சர் சுப்ரமணியம். சென்ற 28ந் தேதிக்கு முன்புவரை அடுக்குமொழி பேசியவர்களைக் கேலிசெய்தவர்கள்-அடுக்குமொழி பேசுவதால் பயன் என்ன என்று அர்த்தமற்ற முறையிலே கேட்டு வந்தவர்கள்-தற்போது சில பெண்கள் அடுக்குமொழி பேசுகிறார்கள் என்றவுடன் ஆனந்தப்படுகிறார்கள். தலைகால் தெரியாமல் திரிகிறார்கள். இதிலிருந்து ஒரு விஷயம் தெரியவருகிறது. அடுக்குமொழிப் பேச்சுகள் இதுவரை தங்களுக்குத் தெரியாமலிருந்ததாலேயேதான் அடுக்குமொழிப் பேச்சு ஆகாது என்று காங்கிரசுக்காரர்கள் சொல்லி வந்திருக்கிறார்கள். அப்படியே அடுக்குமொழியைக் காங்கிரசுக்காரர்கள் கற்றுக்கொண்டு விட்டபோதிலும், அவ்வாறு கற்றுக்கொண்டவர்கள் ஆண்களல்ல, பெண்கள்தான் என்பதைஅவர்களது பேச்சு நிரூபித்து வருகிறது. உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது என்பதை மேற்படி காங்கிரஸ்காரர்களாவது அறிந்திருப்பார்கள் என்று கருதுகிறோம்.

★

கணவன் ஒரு தொல்லை!

★

மனைவி சொல்வது :

"மனைவிளக்கைக் காதலுக்கு அழைக்கும்போது
மக்கள் ஒருதொல்லை" எனமலரில் கண்டீர்!
என்னவிளக்கம் கேட்பதெனில் இதுநான் சொல்வேன்
எழில்மகவு பிறந்ததன் பின்கணவன் தொல்லை!
மணிவிளக்கின் ஒளியடிக்கும் இருளைப்போல
மக்களின்முன் இருளாவான் கணவன்; ஆமாம்!
கனிமணக்கும் சிறுவாயர் பிறந்து விட்டால்
கணவன் மனம் துறவறத்தை நாடவேண்டும்!

அந்தியிலும் காலையிலும் இரவுமுற்றும்
அருகினிலே இருவென்றே இழுத்திழுத்து
முந்தியொரு முன்னூறு நானூறென்று
முத்தங்கள் கொடுப்பதுவும் பெறுவதும்தான்
இந்தஉயிர் படைத்துவிட்ட சுகமா? இல்லை
எழில்மழலைப் பாசந்தான் சுவைவளர்க்கும்
பந்தமெனும் கயிற்றுக்குள் இறுக்கிக்கட்டிப்
பந்தாடும் சேய்முதலில்! கணவன்பின்பே!

ஆயிரம்பேர் முன்னிலையில் கணவன்மார்பில்
அன்போடு சேர்ந்தேஓர் முத்தம்தந்தால்
நாயிவள் என்றுரைப்பார்கள்! நலங்கனிந்த
நளினமலர் மகவுக்கு முத்தந்தந்தால்
தாயரெலாம் துடிப்பார்கள்! தாமும்வாங்கித்
தம்மார்பில் அணைப்பார்கள்! கொஞ்சுவார்கள்!
சேய்பெரிதா? மணவாளன்பெரிதா? ஐயா!
சிந்தனைஏன்! முதல்மதிப்பு யார்க்குரைப்பீர்!

அதனால்தான் மணவாளன் காதலுக்கு
அடுத்த இடம்தருகின்றோம்! இரவில்கூட
மதுவாயா அமுதர்கால் கணவன் மார்பை
மண்ணென்று தள்ளுகிறோம்! சேயெடுத்து
இதமாக அணைக்கின்றோம்! அணைக்கும்போது
எம்நெஞ்சம் உமக்கிருந்தால் அறிவீர்! ஆகா!
பதமாகப் பக்குவமாய்ப் படைத்தஇன்பம்
பால்மணக்கும் வாயன்றி மீசையல்ல!

கட்டிலுக்கு வாயிருந்தால் கதறும்! அந்தக்
காதலுக்கு 'வெறி'என்ற பெயர்தான் உண்டு!
தொட்டிலுக்குக் கையிருந்தால் அணைக்கும்! பிள்ளை
தொட்டதெனிற் பிணங்கூட விழித்துப் பார்க்கும்
வட்டிலிலே சோறிடுவோம் இருவருக்கும்
மகவுண்ணும் அழகைத்தான் பார்த்திருப்போம்!
தட்டறிந்து மகவுக்கு எடுத்துவைப்போம்!
'சாதம்'எனக் கேட்டால்தான் 'அவர்'க்குவைப்போம்!

காதலித்து மணந்ததுவும், விருப்பம்போலக்
கட்டிலிலே சாய்ந்ததுவும், கலந்ததெல்லாம்
நாதமொழிச் சேய்பெறத் தானேயல்லாது
நாங்களும் அவ்வெறிக்கூத்தை விரும்பியன்று!
கீதவழி வீணையினைச் செய்பவர்க்குக்
கேட்டவண்ணம் பொருள்தரல்போற் காதலென்னும்
சேதமிலாப் பொருள்தந்து கருவடைந்தோம்!
சீரோடுகணவனெனப் பணிந்தும் நின்றோம்!

பொருள்பெற்றோர் தினந்தினமும் தொழில்புரிந்தால்
புதுப் புதிய வீணைகளும் பிறக்குமன்றோ?
இருள் வேண்டும்; அருள் வேண்டும்; "பிள்ளைமட்டும்
இல்லாமற்போக" வெனில் என்ன நியாயம்?
கருவேண்டும் மனைவியர்கள் காதல் செய்வார்
காதல் செயும் மனைவியர்கள் கருவுயிர்ப்பார்!
இருகூறும் இல்லாமல் வாழ்க்கையில்லை!
இரண்டினிலும் பின்விளைவு, "கணவன் தொல்லை!"

"இனிச்சகியோம்! ஆடவர்காள்! எழுந்துவாரீர்!
இன்றுமுதல் பிள்ளைகளை எதிர்த்தே நிற்போம்!"
என உரைத்தார் என்கணவர்! பிள்ளைதர்மை
எதிர்ப்பதெனில் எவ்வழியில்? மனைவியர்பால்
இனித்தொடர்பே கொள்ளீரோ? பிழைத்தோம்! அய்யா!
இப்பொழுதே தொடங்குங்கள்! தனித்திருங்கள்!
வனிதையர்காள்! ஒருவிரதம் நீரும்கொள்வீர்!
மகன்பிறந்த பின்னாலே கணவன் வேண்டாம்!

-கண்ணதாசன்

" போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதோரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 3 || 4—5—57 || இதழ் 33

தி. மு. க. என்றால்...

காலமுள்ளின் பாதையில் என் றும்போல் மே தினம் எதிரே வந்து நிற்கிறது. ஓராண்டு வரவு செலவைக் கணக்கிட்டு, காலம் மே தினத்திடம் ஒப்படைக் கிறது. மே தினத்தின் தேம்பல், காற்ருய், புயலாய், தீயாய் கண வேகத்தில் உருப் பெற்று மேக மண்டலத்தில் கலந்து விடு கிறது. காலம் திகைக்கிறது. மே தினத்தின் ஏக்கத்தை மேன் மைக்குரிய காலம் துடைக்க வில்லை இன்னும் !

"காலம், தன்னுடைய மடி யிலே தனமிக்கவர்களை விளை யாட விடுகிறது ; நவநாகரிக சாதனங்களைக் குவித்து மகிழ் கிறது. ஆடம்பரத்தை அணைத்து நிற்கிறது. ஆனால் அவைகளைப் படைக்கும் தொழிலாளர்களை எந்த வகையில் மதித்திருக் கிறது" என்று மே தினம் கண் ணீர் வடிக்கிறது.

இப்படித்தான் தமிழகத்தைப் பொறுத்தவரையில், காலத்திற் கும் மே தினத்திற்கும் உறவு இருந்து வருகிறது.

தொழிலாளர் வாழ்விலே உயர்வு இல்லை. எண்ணத்தில் புதுமையில்லை. ஆனால் மே தினம் மட்டும் வந்து வந்து போகிறது. ஆலயத்துத் திரு விழாவைப்போல், மே தினமும், தொழிலாளர்களை வைத்துக் கொண்டு செப்படி வித்தை காட்டுவோரின் அரசியல் திரு விழாவாகவே நடந்து முடிந்து விடுகிறது. நேற்றைய தீபா வளிச் செலவுக்குக் கடன் வாங் கியவன் இன்று வருந்தி நிற் பதைப் போல் தான் தொழிலா ளர்களும் மே நாள் விடுமுறைக் காக மறுநாள் அதிக வேலை செய்கிருர்கள். இந்நிலையில் மே தினம் அவசியம் தானு ?

ஆனால், கடந்த ஓராண்டுக் காலத்தில் எத்தனை மாற்றங் கள் நடந்தேறியிருக்கின்றன. உழைப்பு உயர்வைத் தந்திருக் கிறது; வாழ்வைக் கொடுத் திருக்கிறது; அச்சத்தை நீக்கி யிருக்கிறது; அயர்வைப் போக்கி யிருக்கிறது. ஆனால் இங்கே ?

ஆத்மீகத்தைப் பரப்புவோர் மட்டுமல்ல, தொழிலாளர் தலை வர்களும்கூட ஆத்மீக வளர்ச்சி தான் நாட்டுக்குத் தேவை என் றும் பிரச்சாரம் செய்வதோடு, இந்தியத் துணைக்கண்டத்தின் ஆத்மீக உணர்ச்சிதான் உலகத் தைக் காக்கிறது என்றும் பேசி வருகிருர்கள். இந்த மனப் போக்கினுல்தான், தொழிலாளர் களுக்கென தனிக்கொடி வைத் திருப்போர் கூட மே தின விழாவை சாரமற்ற வெறும் கூத்தாக நடத்திக் காட்டி விடு கிருர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரை அப்படிப்பட்ட 'பாவச் சுமை'களைச் சுமந்து நின்றது இல்லை. தொழிலாளர்களுக்கு சரியானபடி கைகொடுக்கவில்லை தி. மு. க. என்று சிலரது அவசரப்பட்ட பேச்சுக்கு இலக் காகியிருக்கிறதே தவிர, தொழி லாளர்களை ஏமாற்றிய கட்சி களை விட்டு வெகு தூரம் ஒதுங் கியே நின்றிருக்கிறது. ஒதுங்கி நிற்கவேண்டிய அவசியம் என்ன ? தொழிலாளர்களைக் கைதூக்கிவிட கழகத்திற்கு விருப்பமில்லையா ? கழகத்திற் குத் தொழிலாளர்களின் ஒத் துழைப்புத் தேவையில்லை என்ற எண்ணமா ? இல்லை. தி. மு. கழகத்தைத் தொழிலாளர்கள் புரிந்துகொள்ள முனையவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ருலே, அது தொழிலாளர் பாசறை என்று தான் பொருள் என தி. மு. க. திடமாக நம்பு கிறது. ஏனெனில் திராவிடர் கள் தான் தொழிலாளர்களாக வும், பாட்டாளிகளாகவும், விவ சாயிகளாகவும் இருக்கிருர்கள். வேறு எந்த இனத்தைச் சார்ந் தவர்களும், தென்னுட்டைப் பொறுத்தவரையில் வியர்வைத் துளிகளை **நம்பி** வாழ்க்கைச் சக்கரத்தை **உருட்டி**க்கொண் டிருக்கவில்லை. எனவேதான் தி. மு. க. என்ருல் தொழிற் சங்கம், உழவர் சங்கம் என்று கழகத்தின் செயற்குழுவும், பொதுக்குழுவும் கருதி வருகின் றன. ஆனால் தொழிலாளர் களில் மிகப் பலர் கட்சிக்குப் பெயரே 'தொழிலாளர்'பற்றிய தாக இல்லை என்று எண்ணி ஒதுங்கினுர்கள். அந்த நிலை மாறவேண்டும் எனக் கழகம் கருதியது. ஆனால் தொழிலாளர் களை பலர் பல கட்சிகளுக்குப் பங்கு போட்டுக்கொண்டு விட்ட தால் தி மு. க. தொழிலாளர்கள் தனித் தொழிற்சங்கம் ஏற்படுத் திக்கொள்ள நேரிட்டிருக்கிறது. அதற்கான பணியினை ஆற்றிட நினைக்கிறது. இனி **மேற்** கொண்டு, தொழிலாளர் நலன் பற்றி மக்கள் **மன்றத்** தில் எடுத்துரைத்ததை **தனிச்** சங்கங்கள் மூலம் **எடுத்** துரைக்கும். சக்திக்கேற்றதை நிச்சயம் செய்யும். தொழிலாளர் பெருமக்களுக்கு, சிறப்புமிகுந்த இந்த மே விழாவன்று **எங்களின்** மேலான வாக்குறுதியை **மகிழ்** வுடனும் பொறுப்புடனும் **தெரி** வித்துக் கொள்கிருேம். திரா விடப் பாட்டாளி மக்கள் **ஒன்று** கூடி ஒத்துழைப்பு நல்கி **கழகத்** தின் பலத்திற்குப் **புது ரத்தம்** பாய்ச்சிட வேண்டுகிருேம். ★

தஞ்சையில் வெடித்த குண்டு!

"ஏழைகள் செய்யும் குற்றங்களுக்குக் காரணம் அவர்களின் ஏழ்மை. ஆக்வே தண்டிக்கப்படவேண்டிய வர்கள் ஆட்களல்ல, பொருளாதார பேத அமைப்பு முறை. இது என் தீர்ப்பு "—என்று நமது தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள் பலமுறை கூறிவிட்டார்கள். சமயம் வாய்க்கும்போதெல்லாம் அரசியலாரின் கவனத்திற்கு இந்தக் கருத்தைக் கொண்டு வந்திருக்கிருர்கள். அந்தக் கருத்தை சென்ற வாரம் ஒருவர் வெளியிட்டிருக்கிருர் துணிச்சலோடு !

எந்தக் கருத்தில், தத்துவத்தில், எவ்வளவுதான் உண்மையிருந்தாலும் அதை வெளியிடுவோரின் தகுதி யைப் பொறுத்தே அது வலுப்பெறுவதுண்டு.

அண்ணு சொன்னுர். "எதிர்க்கட்சிக்காரர், காங்கிரஸ் அமைச்சரவையைக் குற்றம் சாட்டுவதற்காக இப்படியெல் லாம் சொல்கிருர்" என்ருர்கள், அவசரத்தில் மிகப்பலர். காங்கிரசுக்குள்ளேயே இருந்து ஒருவர் சொன்னுல், யாரோ மந்திரி பதவியை எதிர் பார்த்து ஏமாந்த எம். எல். ஏ. ஒருவர் இப்படிச் சொல்கிருர் என்று சொல்வார்கள். இந்த இரு சாரார்களுமே இல்லாமல் ஒரு அதிகாரி சொன்னுல், உண்மையிலேயே அந்தக் கருத்துக்கு அதிகமான சக்தி பிறக்கத்தான் செய்யும். அதுவும் இப்போது, அண்ணு அவர்களின் கருத்தை வெளியிட்டிருப்பது சாதாரண அதி காரியல்ல, போலீஸ் இலாகாவின் தலைவராகப் பணிபுரிகிற வரே இவ்வாறு கூறியிருக்கிருர்.

"வறுமையை ஒழித்தால் திருட்டு ஒழிந்துவிடும்"

—போலீஸ் அதிகாரி ராஜரத்தினம் அவர்கள் தஞ்சை யில் வெளியிட்ட கருத்துரை இது. தனக்குத் தரப்பட் டிருக்கும் பொறுப்புகளில் ஒன்று, எதனுல் விளைகிறது, அந்தக் குற்றத்தின் விளைநிலம் எது என்பதைத் துணிந்து வெளியிட்டு விட்டார். இங்கே ராஜரத்தினம் அவர்கள் அமைச்சர்களைக் குற்றம் சாட்டுகிருர் என்றல்ல பொருள். நாட்டின் நிலையை அனுபவத்தால் கற்று வெகு நாட்களாக அடக்கி வைக்கப்பட்டிருந்த கருத்தை தன்னையுமறியாமல் வெளியிட்டிருக்கிருர். எத்தனை பேரைக் கையுங் களவு மாகப் பிடித்திருப்பார் ? அவர்கள் மூலம் எத்தனை எத்தனை சோகக் கதைகளைக் கேட்டிருப்பார் ?

"வறுமை—திருடினேன் !"

"பசிக்கொடுமை—திருடினேன் !"

"இல்லை—விபச்சாரம் புரிந்தேன் !"

"காப்பாற்ற வகையில்லை—கழுத்தை முறித்துக் கொன்றேன் !"

—என்று தானே அத்தனைபேரும் சொல்லியிருப் பார்கள். அந்தத் துன்பக் கதைகளின் சாரத்தை ராஜ ரத்தினம் இரண்டே வரிகளில் வெளியிட்டது பாராட்டத் தக்கதாகும்.

கூறியிருப்பது எதிர்க்கட்சிக்காரர்கள் அல்ல, சென்னை மாநில நிர்வாக இயந்திரத்தில் ஒரு பற்சக்கரமாக விளங் கும் போலீஸ் அதிகாரி என்பதை மனதில் கொண்டு சென்னை அரசியலார் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என நம்புகிருேம்.

தொழிலாளர் நல இயக்கங்களும்

பண்டைக்காலங்களிலும் இடைக் காலங்களிலும் மனிதர்கள் குடும்பம் குடும்பமாக, கும்பல் கும்பலாக, ஆளும் இனத்தவராகிய கொடியோர்களால் ஆடுமாடுகள்போல அடிமைகளாக விற்கப்பட்டனர், வாங்கப்பட்டனர். இந்த அடிமை முறையை அக்கால அரசியல் சட்டங்கள் ஆதரித்தன. சமுதாயங்கள் வலியுறுத்திப்பேணின. அந்நாளைய முதலாளித்துவத்தின் வலிமை இது. மதங்கள் – முற்போக்குடைய இஸ்லாமிய கிறிஸ்தவ சமயங்கள்கூட இதை நெடுங்காலம் எதிர்க்கத் துணியவில்லை. மறைமுகமாக ஆதரிக்கவே வழிகள் கண்டன. பழங்கால முதலாளித்துவத்தின் மாயை இது.

வில்லியம் விப்பர்போர்ஸ் போன்ற ஆங்கில முற்போக்காளருரும் ஏபிரகாம்லிங்கன் போன்ற பகுத்தறிவொளி சான்ற அமெரிக்கத் தலைவர்களும் 18-ம் நூற்றாண்டில் பெரும் போராட்டமாடியே சட்டத்திலும் செயலாட்சியிலும் நடைபெற்று வந்த இந்தக் கோர மனித இன அநீதியின் கதையை மனித நாகரிகத்திலிருந்தும் சட்ட, சமய சமுதாய வாழ்வுகளிலிருந்தும் அப்புறப்படுத்தினர்.

அடிமைகள் அடைந்த அவதிகளை, அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை, மயிர்சிலிர்க்க வைக்கும் கொடுமைகளைப் பற்றி வாசிப்போர், கேட்போர் மனித இனம் இவற்றை எப்படித்தான் ஆதரித்ததோ என்று இன்று அதிசயப்படுவார்கள். அவற்றை எளிதில் நம்பக்கூட மறுப்பார்கள். ஆனால் அவற்றுக்குப் பெரிய பெரிய மனிதர்கள், பெரும்பாலான பொதுமக்களே அன்று ஆதரவு காட்டினர் என்பதை வரலாறு எடுத்துக்காட்டுகிறது. ஒரு சில அறிஞர், கலைஞர், சமுதாயத்தின் மாசகற்ற உயிர் கொடுத்துப் பாடுபட்ட வீரர் உலகில் தோன்றிப் பெரும்போர்கள் ஆற்றியிராவிட்டால், உலகில் அந்தக் கறை இன்றும் அகன்றிருக்காது. இரு நூறு ஆண்டுகட்குமுன்வரை உலகெங்கும் அந்தக் கறை பரவியிருந்ததென்பதை வரலாறு மறக்கமுடியாது.

அடிமை முறையை ஒத்த அதனினும் கொடிய பல அநீதிகள், கொடுமைகள் இன்னும் எத்தனையோ உலகில் இருந்தன, இருந்துவருகின்றன. அவற்றில் சில பல நீக்கப்பட்டன. சில நீக்கப்பட்டுவருகின்றன. அதே சமயம் புதிய அநீதிகள், புதிய கொடுமைகள் தெரிந்தும் தெரியாமலும் மனித இனத்தில் தோன்றி வளராமல் இல்லை. மனித இனத்தின் காலங்கடந்த, சூழல்கடந்த அறிஞர்கள், கலைஞர்கள், அருளாளர், வீரர் அவற்றுடன் ஓயாது போராடி உயிர்கொடுத்த வண்ணமே இருக்கின்றனர், இருப்பர். பகுத்தறிவொளியின் கதிர்கள் படாத பல சமுதாயப் பரப்புகளில் இந்நல்லறிஞர் முயற்சிகளுக்கு அடிமை முறைக்காலத்தில் இருந்தது போலவே எதிர்ப்பு இருந்ததுண்டு, இருப்பதுண்டு. சமய வாழ்வு, சமுதாய பொருளியல் வாழ்வுடன், அரசியல் வாழ்வுகளில் ஆளும் இனம் அல்லது இனங்கள் அன்று அந்நன் முயற்சிகளை எதிர்த்து, நாத்திகம், புரளி, கலகம் என்று பழிகள் சூட்டி அழிக்கமுற்பட்டது போலவே, இன்றும் அழிக்க முற்படுவது இயல்பு. ஆனால் காலம் அந்நாள் முயற்சிகளின் பக்கமே இருந்து வந்துள்ளது. மனித இன வாழ்வு அந்நன் முயற்சிகளைப் பின்பற்றியே வளர்ந்துள்ளது, வளர இருக்கிறது என்பதை வரலாறு காட்டுகிறது.

அடிமை முறையைக் கண்டிக்கும் பலர் இன்னும் சாதி முறையை குடிபோதை முதலிய பழக்க வழக்கங்களை, மாயமந்திர மோசடிகளை, நிறவேற்றுமையை, ஏகாதிபத்திய ஆட்சியை நேரடியாக ஆதரிக்கவோ, மறைமுகமாக வலுப்படுத்தவோ, மாற்றமுடியாத இயற்கை நிகழ்ச்சிகள் என்று கூறி மழுப்பிப் போகவோ தயங்குவதில்லை. சில சமயம் உயர்ந்த இலட்சிய வேதாந்தங்களைக் கூறி அவற்றுக்கு விளக்கம் தந்து பசப்பவோ, அவற்றைச் செயலில் ஆதரித்த வண்ணமே அவை அகன்றுவிட்டன என்று நாகரிக நடிப்பு நடிக்கவோ அவர்கள் முனைகின்றனர். திராவிட இயக்கமும் சிறப்பாக திராவிட முன்னேற்றக் கழகமும் போன்ற உலக இனமலர்ச்சி இயக்கங்கள் மக்கள் இயக்கங்கள் தான் அவற்றின் பிடியை மக்கள் மன்றத்திலும் கலையிலும் இலக்கியத்திலும் சமய சாத்திரங்களிலும் நாடக திரைப் படங்களிலும் எதிர்த்த கற்ற அரும் பாடுபட்டு வருகின்றன. தூற்றலுக்கும் பழிக்கும் ஆளாகி உயிரிழப்புக்கும் மான இழப்புக்கும்கூட அஞ்சாமல் இப்பணியில் அவை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் கண்டே வருகின்றன என்பதை அறியாதார் இல்லை.

பழய அடிமைக்கால முறைகள் இன்னும் இவ்வாறு இருக்க, இவை போதாமல் புதிய இரண்டு அடிமைத்தனங்கள் புதிய பெயர்களுடனும் நாகரிகத் தோற்றப் பொலிவுடனும் உலகிலும் நம்நாட்டிலும் கோர நடனம் ஆடிவருகின்றன. அவற்றுள் ஒன்று முதலாளித்வம்-இது உலகெங்கும் மேலை நாகரிகப் போர்வையுடனேயே பகட்டான சதிராட்டம் ஆடி வருகிறது. அதன் மிக மோசமான ஒரு வடிவம், செயலாட்சி முதலாளித்துவம் இந்திய பொருளாதார வாழ்வில் தன் நச்சுப்பல்லை ஆழப்பதித்து மக்கள் குருதி உறிஞ்சி வருகிறது. மற்றொன்று அடிமை முறையின் புதிய பதிப்பாகிய ஒப்பந்தத்தொழில் முறை. இது ஏழைத்தென்னாட்டவர், தமிழர், தமிழகத்தில் உரிமையற்றுக் கிடப்பது போதாமல், தமிழக ஆட்சியாளரின் ஒத்துழைப்புடனேயே உலகிலும் உரிமையற்றுப் பல நாடுகளிலும் உழைத்து உருக்குலைவுற்று உரிமையற்றுத் திண்டாடும் நிலையை உண்டுபண்ணி வருகிறது. வெள்ளையர் ஆட்சியிலேயே தொடங்கிய இந்த அநீதியின் கோர விளைவுகள் சுயஆட்சி இந்தியாவின் மாற்றுந்தாய்ப் போக்கிலேயே மிகவும் மோசமான நிலையை அடைந்து வருகிறது. தமிழர் உரிமைக்குப் போராட வேண்டிய நிலையிலுள்ள தமிழர் கட்சியே மற்ற உலக இனங்களுடன் சேர்ந்துகொண்டு தமிழினத்தின் குருதிக்காட்டிலும் பிணக்காட்டிலும் நின்று அவ்வினத்தையே அழிக்கும்படி தன் ஏகாதிபத்தியக் கூலிகளான தமிழக அரசியலைத் தூண்டி ஊக்கி வருகிறது.

1957 மே விழா நாளில் உலகத் தொழிலாளர் பொதுவாக, தமிகத் தொழிலாளர் சிறப்பாக இந்த இரு அநீதிகளிலும் கருத்தைச் செலுத்த வேண்டியது அவசியம்.

உலகில் தொழிலாளர் நிலையை உயர்த்தத் தனிப்பட்ட தொழிலாளர் இயக்கங்கள் பல உழைத்து வருகின்றன. அத்துடன் காந்தியடிகள், டால்ஸ்டாய், ரஸ்கின் போன்றவர்கள் கலை இலக்கியத்துறைகளிலும், கார்ல்மார்க்ஸ் போன்றவர்கள் அறிவுத்துறையிலும், கம்யூனிஸ்டுகள், சோஷலிஸ்டுகள் ஆகிய கட்சியினர் பொருளியல் அரசியல் துறைகளிலும் அதற்கான செயல்களில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இவை எல்லாவற்றிலும் ஒருங்கே கருத்துச் செலுத்தி, பழய அடிமைக் கோட்டையின் அடித்தளத்தையும், புதிய அடிமைத்தளங்களாகிய மதில்களையும் மோட்டையும் ஒருங்கே திட்டமிட்டுத் தாக்க முனைந்துவரும் இயக்கம், எல்லா இனங்களின் நற்கூறுகளையும் திரட்டி அளவு கடந்து சிந்தனையைச் செலுத்தி உலகுக்கு வழிகாட்ட முற்பட்டுள்ள இயக்கம் திராவிட இயக்கம் - திராவிட முன்னேற்றக் கழக இயக்கமே யாகும்.

முதலாளித்துவ எதிர்ப்பு என்பது இதுகாறும் பெரும்பாலும் முதலாளிகளின் எதிர்ப்பாகவும் முதலாளிகளின் ஆதாய ஆட்சி எதிர்ப்பாகவும் மட்டுமே இருந்துவந்திருக்கிறது. முதலாளித்துவத்தைத்தான் எதிர்க்கிறோம், முதலாளிகளையல்ல என்றே எல்லாரும் சொல்லளவில் சொன்னாலும், முதலாளித்துவம் எது, முதலாளிகளுக்கும் அதற்கும் உள்ள தொடர்பு யாது என்பது பற்றிச் சிந்திப்பவர், அதன்படி செயலாற்றும் மிகச் சிலர். முதலாளித்துவம் என்பது ஆதாய நோக்கம். ஆனால் இந்த நோக்கம் உடையவர்கள் இன்று முதலாளிகள் மட்டுமல்ல, கிட்டத்தட்ட மனித சமுதாயம் முழுவதுமே. முதலாளித்துவம் பின்பற்றும் முறை தன்னலப்போட்டி. இதுவும் முதலாளிகள் மட்டும் பின்பற்றும் முறை ஆகமாட்டாது. ஆனால் முதலாளிகள் நோக்கத்துக்குக் கையாளும் முறைக்கும் வலுத்தரும் அமைப்பு முறை ஒன்று உண்டு. முதலாளித்துவத்தின் ஆணிவேர் அதுவே. உண்மை முதலாளித்துவ எதிர்ப்பாளர் இதிலேயே கவனம்செலுத்த வேண்டும்.

மனித வாழ்வை ஆன்மிகம் என்றும் உலகியல் என்றும், நாகரிகத்தை மேல்திசை என்றும் கிழ்திசை என்றும்; ஒழுக்கத்தைத் தனி ஒழுக்கம், சமுதாய ஒழுக்கம், சமய ஒழுக்கம், அரசியல் ஒழுக்கம் என்றும் இக்காலத்தவர் பிரிக்கின்றனர். இதுபோன்ற ஒரு பிரிவே முதலாளிகள் தொழிலாளிகள் என்பது. மனிதரில் பெரும் இயல்பார் முதலாளியாகப் பிறப்பதில்லை, தொழிலாளியாகப் பிறப்பதில்லை. ஆயினும் இன்றைய சமுதாயத்தில் அப்படிப் பிறக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. மிகவேகமாக, அப்படையில் இரண்டு வேறு இனங்கள்-முதலாளி இனம், தொழிலாளி இனம் என்ற இருவேறு இனங்கள் தோன்றிப் பிரியத் தொடங்கிவிட்டன. இதனைத் தொடக்கத்தில் முதலாளி தொழிலாளி என்ற வேறுபட்ட கருத்தும் பின், ஆட்சி இனத்தவரின் சூழ்ச்சியால் அவ்வேறுபாடும் அதன் வளர்ச்சிக்கான செயல்களும் தோன்றி வளர்ந்து வருகின்றன. இவ்வேறுபாட்டை மிகவும் வளர்த்துவரும் அமைப்பே முதலாளித்துவம் என்ற மாய இயந்திர அமைப்பு ஆகும்.

முதலாளித்துவம் என்ற அமைப்பின் உயிர், முதலாளி தொழிலாளி என்ற பாகுபாடே. முதலாளி என்று சிலரும் தொழிலாளி என்று பலரும் இருக்கும் மட்டும் முதலாளித்துவம் அழியாது. எல்லா மனிதரும் தாமே தமக்கு முதலாளியாகவும், தம் கைகால் மூளை ஆகிய உறுப்புக்களே தம் தொழிலாளிகளாகவும் அமையும் அமைப்பே முதலாளித்துவமில்லாத இயற்கை மனித அமைப்பு. இத்தகைய அமைப்பையே கார்ல் மார்க்ஸ் "வகுப்பு வேறுபாடற்ற சமுதாயம் (Classless Society)" என்று குறித்தார். ஆனால் கம்யூனிஸ்டுகளும் சரி, சோஷலிஸ்டுகளும் சரி–இன்று இந்த முதலாளித்துவ அமைப்பின் அரங்கத்துக்குள்ளேயே – முதலாளி தொழிலாளி வேறுபாட்டிலேயே-வகுப்புணர்ச்சிகளைக் கிளறிவிட்டு அதனிடையேதான் தவழ்ந்து விளையாடுகின்றனர் என்பது மிகையாகாது. வகுப்பு வேறுபாடற்ற சமுதாயத்தை அமைப்பது எப்படி என்பது பற்றி அவர்கள் கனவு கூடக் காணவில்லை. காந்தியடிகள் குறிப்பிட்டபடி இடையே விளையாடும் நம் தரகு வகுப்பை வளர்ப்பதுடன் தொழிலாளர் தலைவர்கள் பலர் அமைந்துவிடுகின்றனர்.

'மஞ்சள் கடுதாசி'

'மஞ்சள் கடுதாசி' என்பது தரக்குறைவான பட்டப் பெயராகும். வாங்கிய கடனைத் திருப்பித் தர இயலாதவர்களையும், வாக்குறுதியைக் காற்றிலே பறக்கவிட்டவர்களையும் 'மஞ்சள் கடுதாசி' என்றுதான் அழைப்பார்கள். அரசியலாரே அப்படி ஒரு முத்திரையைப் பொறித்துவிடுகிறார்கள். கடன் சொத்து சம்பந்தப்பட்ட எந்தச் சட்டமும் அவர்களைப் பாதிப்பதில்லை. கௌரவத்தைப் பெரிதெனக் கொள்பவர்களுக்குத்தான் சட்டமும் தண்டனையும் போலும்! அதனால்தான் 'மஞ்சள் கடுதாசி' கொடுத்தவர்கள் எதையும் சொல்கிறார்கள்; எதையும் பேசுகிறார்கள்; எந்த அவமானமும் அவர்களுக்கு உணர்ச்சியைத் தூண்டுவதில்லை. 'நமக்கென்ன

திராவிட இயக்கக் குறிக்கோள்களும்!

முதலாளித்துவ சமுதாயத்தில் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே புதிதாக மேனாட்டில் தோன்றிய நடுத்தர வகுப்பு, அறிவு வகுப்பு ஆகியவற்றைப் பற்றிக் கார்ல்மார்க்ஸ் ஆராயத் துவங்கவில்லை. அவற்றின் போக்குகளையும் அப்போக்குகளின் சாதக பாதகங்களையும் அவர் காலச் சூழலிலிருந்து அவர் மதிப்பிடவும் முனைந்துள்ளார். முதலாளிக் குழு முதலில் தொழிலாளரிடமிருந்து உண்மை முதலீட்டின் ஒரு பகுதியாகிய உழைப்பைப் பிரித்து முதலாளித்துவச் சுரண்டலில் இறங்கிற்று. பின் அதன் மற்றொரு பகுதியாகிய அறிவைப் பிரித்து அறிவு வகுப்பை உண்டுபண்ணி, அதைத் தனக்கே அடிமைப்படுத்தித் தன் 'விபீஷண' வகுப்பாக்கிக் கொண்டது. இறுதியில் தொழிலாளிகளிடம் இன்னும் மீந்துள்ள 'தன்முயற்சி'யையும் பிரித்தெடுத்து, அதனடிப்படையில் 'நடுத்தர வகுப்பை' உண்டுபண்ணி அதனையும் 'கங்காணி' வகுப்பாக்கப் பாடுபட்டது, பாடுபட்டு வருகிறது.

இதனிடையே முதலாளிகளிடையே உள்ள போட்டி ஒருபுறமும் நடுத்தர வகுப்பு, தொழிலாளர் வகுப்பு, அறிவு வகுப்பு ஆகியவற்றிடையே உள்ள போட்டி ஒருபுறமும், முதலாளித்துவத்தையே ஆட்டி நலிவிக்கத் தொடங்கிற்று. இதையறிந்த முதலாளித்துவம் 'முதலில்லா முதலாளித்துவ' வகைகளை உண்டுபண்ணித் தன்னைக் காக்க முற்பட்டது. கார்ல் மார்க்ஸ் காலத்திலேயே அவர் கண்ட இக்கோரமான புதிய 'முதலில்லா முதலாளித்துவ முறைகள்' இன்று பல வடிவங்களில் - ஒப்பந்த முதலாளித்துவம், குத்தகை முதலாளித்துவம், மேலாட்சி புரிமை முதலாளித்துவம், நாணயச் செலாவணி முதலாளித்துவம், சூதாட்ட முதலாளித்துவம், கூலி ஒப்பந்த முதலாளித்துவம், அரசியல் முதலாளித்துவம் ஆகிய பல உருவங்களுடன் எடுத்துத் தழைத்து வருகின்றன.

காந்தியடிகள் முதலாளித்துவத்தின் இரண்டு அடிப்படைகளை - வேறு எந்த முதலாளித்துவ எதிர்ப்பு அமைப்பும் காணாத, கண்டு கண்டிக்காத அடிப்படைகளைக் கண்டுணர்ந்து அவற்றின் மீது ஒளி செலுத்தினர்.

இவற்றுள் ஒன்று, முதலாளித்துவம் தானே விஞ்ஞானத்தைக் கைப்பற்றி, பலர் உழைப்பை ஒருமுகப்படுத்தி ஒருவன் கையில் ஒப்படைக்கவல்ல இயந்திரங்களை ஊக்கும் முறை ஆகும். இத்தகைய இயந்திரங்களிலேயே அறிவுவகுப்பு மூளையைச் செலுத்தும் தோறும், முதலாளித்துவமே வளர்ந்து மனித சமுதாயம் மென்மேலும் அழிவு நோக்கிச் செல்லுவது உறுதி என்பதைக் காந்தியடிகள் காட்டினர். இவற்றுக்கு மாறான தனி மனித அல்லது சமுதாயக் கூட்டு உழைப்புக்குரிய இயந்திர அமைப்புக்களில் புதிய உலக விஞ்ஞானிகள் ஈடுபடுவதும் பழய இயந்திர அமைப்புக்களை மாற்றியமைப்பதும் முதலாளித்துவ சமுதாயத்தை மாற்றியமைப்பதற்கான மூல வழிகள் என்று அவர் கண்டார்.

இரண்டாவதாக, அரசியல், சமயம், பொருளியல், சமுதாயம், ஒழுக்கம் ஆகிய எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் முதலாளித்துவத்துக்குச் சாதகமான அமைப்பு முறைகள், தத்துவங்கள் நிலவுகின்றன. கலை, இலக்கியம், நிலைய நிறுவனங்கள் ஆகியவை இவற்றையே வளர்த்துவருகின்றன. அரசியல் சமய சமுதாய பொருளியல் வாழ்வுகளில் வலுவாய்ந்த மைய ஆட்சி ஏற்பட்டால் அது உலகில் முதலாளித்துவம் வளரவும் மனித சமுதாயம் அழியவுமே வழிவகுக்கும். தவிர, கூட்டாட்சிகளில் உறுப்புக்களின் வலிமை வாய்ந்த சரிசம உரிமையாட்சியும், நாட்டாட்சிகளில் சரிசம ஊராட்சியும் ('கிராம சுய ஆட்சி'), ஊராட்சியில் கூடிய மட்டும் தனி மனித உரிமை மீது அமைந்த சரிசம ஆட்சியுமே மனித சமஉரிமைகளையும் சமதருமத்தையும் பேண வல்லவை.



தேசியப் பொதுவுடமை, பொது உடைமை ஆகியவை குறிக்கோளளவில் உயர்ந்ததாகத் தோற்றுபவையேயானாலும், செயலளவில் எல்லா உடைமைகளையும் உரிமைகளையும் வாழ்வு தாழ்வு நலங்களையும் ஆதிக்கத்தையும் ஆட்சி வகுப்பிலும் ஆதிக்கம் செலுத்தும் ஓரிருவர் அல்லது ஒரு தன்னலக் குழுவின் கரத்திலுமே கொண்டு ஒப்படைத்துவிடுவதாக அமைந்துவிடுவதே இயல்பு. கம்யூனிஸ்டு கட்சியே ஆளும் ரஷ்யாவில் கூட, உச்சதளப் போட்டிகள் முற்றிலும் ஏகாதிபத்திய உச்சதளப் போட்டிகளிலிருந்தும் முதலாளித்துவ உச்சதளப் போட்டிகளிலிருந்தும் வேறு பிரித்தறிய முடியாதவைகளாகவே உள்ளன என்பதைப் பொதுமக்கள் மேலீடாகவே காணலாம். இதனாலேயே காந்தியடிகள் கூட்டுடைமையைவிடச் சமத்துவத்தையே உயர் குறிக்கோளாகக் கொண்டார். எப்படி தேசீயக் குறிக்கோள் உயர்ந்த குறிக்கோளானாலும் முதலாளித்துவத்தின் கையில் அது முதலாளித்துவத்தின் தங்கு தடையற்ற உரிமையாட்சியாக மாறிவிடுகிறதோ அதுபோல, கூட்டுடைமை அல்லது பொதுவுடைமை என்ற மாயக் குறிக்கோளும் நடைமுறையில் முதலாளித்துவத்தின் கைப்பட்டுக் கோர வடிவான கொடிய உலக முதலாளித்துவம் ஆகிவிடுமென்று அவர் கண்டார்.

காந்தியடிகளும் திராவிட இயக்கமும் தொடக்க முதல் தொழிலாளர் நலனில் வற்புறுத்தி வரும் மற்றொரு செய்தி உண்டு. முதலாளித்துவத்தை எதிர்ப்பதற்குத் தொழிலாளிகள் ஒற்றுமைப்பட வேண்டும். தங்கள் தனி வலுவையும் கூட்டு வலுவையும் ஒருங்கே வளர்க்க வேண்டும். ஆனால் அரசியல் கட்சிகளின் தலைமையிலும் அரசியல் கட்சி ஆதரவாளர்களின் தலைமையிலும் தொழிலாளர் கூட்டு வலு, நாடு நாடாக மட்டுமன்றி, கட்சி கட்சியாக, சங்கம் சங்கமாக, சில சமயம் உட்கட்சி எதிர்க்கட்சியாகச் சிதறடிக்கப்படுகிறது. அதே சமயம் இதுவரை எந்தக் கட்சியும் அவர்கள் தனிவலு அல்லது பொது வலுவிலே ஒரு சிறிதும் அக்கறைகூடக் காட்டவில்லை. 'பீஸ்' வாங்கி வழக்குகளைப் பெருக்கி ஆதாயமடையும் வக்கில்களைப் போலவே தொழிலாளர் தலைவர்கள் அவர்கள் போராட்டப் போட்டிக்கு அவர்களைப் பெருக்கி, உணர்ச்சிகளைக் கிளர்ந்தெழவிட்டு ஆதாயம் நாடுகின்றனர். தொழிலாளர்களும் தொழிலாளர் இயக்கப் போர்வை போர்த்து நடமாடும் இந்தப் புதிய முதலாளித்துவ மாயையில் ஈடுபட்டுத் தம் உண்மை நலங்களை மறந்து இந்த உணர்ச்சி மாயையிலேயே தவழ்ந்து தடுமாறித் தத்தளிக்கின்றனர்.

காந்திய, திருவள்ளுவக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு உழைக்கும் திராவிட முன்னேற்றக் கழக இயக்கம் தொழிலாளர்களிடையே ஒரு கட்சி என்ற முறையில் இயங்க விரும்பாததனாலேயே யார் யாரோ தொழிற் சங்கங்கள், விவசாய சங்கங்கள் நடத்திய போதும், திராவிட முன்னேற்றக் கழக ஆதரவாளர்களே—பெரும்பாலான தொழிற் சங்க உறுப்பினராயிருந்து தனிச் சங்கங்கள் அமைக்க அவர்களை வற்புறுத்திய போதும் இதுவரை தொழிலாளர் ஒற்றுமை கருதியே முற்றிலும் ஒதுங்கி நின்றுள்ளது. ஆனால், உயர் குறிக்கோளுடையவர் ஒதுங்கி நிற்பதால் மட்டுமே உயர் குறிக்கோள்கள் ஈடேறிவிட முடியாது. ஒற்றுமையும் ஏற்பட்டுவிட முடியாது. ஆகவே தொழிலாளரிடையே கட்சியாக இயங்காமல் கட்சி கடந்த ஒற்றுமைக்காகப் பாடுபடவும், எந்தக் கட்சியினரும் இதுவரை அக்கறை காட்டாத, தொழிலாளர் தனிவலு, பொதுவலு ஆகியவற்றை அதிகரிக்கவும், தொழிலாளர்களிடையே தன்னம்பிக்கை, ஒற்றுமை, தன் மதிப்பு அறிவு ஆகியவற்றை வளர்க்கவும் அவர்கள் வாழ்க்கைத் தரம், உடல்நலம், அறிவுநலம் ஆகியவற்றை வளர்க்கவும் தொழிலாளர் அரங்கத்தில் பங்கு கொள்வதென திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்துள்ளது. அதன் முதற்பணி தொழிலாளர்களிடையே அறிவு பரப்பும் பணியாகவும் தொழிலாளர் இன உணர்வு கோருவதுமாகவுமே அமையும் என்று கூறத் தேவையில்லை. ஆனால், இதன் அடிப்படையிலே தொழிலாளர் நாளடைவில் கட்சிகளின் தலைமையில் இயங்கினால் எத்தனை தலைவர்களுடன் எத்தனை சங்கங்களாக இயங்கினாலும், கட்சிகடந்த, தலைமை கடந்த, சங்கம் கடந்த தொழிலாளர் இன ஒற்றுமை பேணலும், 'தொழிலாளர் - முதலாளி, வேறு பாடற்ற சமுதாய அமைப்பு முறைக்கான பணிகள், திட்டங்கள் யாவையும், தொழிலாளர் இன உணர்வுடன் எல்லாத் தொழிலாளருக்கும் ஒரு தொழிலாளி ஒரு தொழிலாளிக்கு எல்லாத் தொழிலாளி என்ற முறையில் நின்று தம் தனி வலிவும் கூட்டு வலிவும் தனி வாழ்க்கை உயர்வு, கூட்டு வாழ்க்கை உயர்வும் ஒருங்கே பெறவும் தக்க பயிற்சி முறைகளில் ஈடுபடுத்தப்படுவர். திராவிட முன்னேற்றக் கழகக் குறிக்கோள் அவர்களை ஊதிய உயர்வுக்கும் அது கடந்த உரிமை உயர்வுக்கும் சமுதாய ஆட்சி உயர்வுக்கும் ஒருங்கே போராடும்படி திட்டங்கள் வகுப்பதுடன், பிறகட்சிகளையும் அவ்வகையில் தூண்டுவதாகக் கட்டாயம் செயலாற்றும்.

1957 மே விழா இவ்வகையில் தி. மு. க. வின் இனக்குரல் எழுப்பப்படும் தொழிலாளர் புது ஒற்றுமை தொடங்கும் நாளாக இயங்குமாக.

எழுதியது
கா. அப்பாதுரையார்
எம். ஏ., எல். டி.

மந்திரி இவர்!

இருக்கிறது, நாம்தான் மஞ்சள் கடுதாசியாயிற்றே' என்று நாணற்செடியைப்போல் நெளிந்து வளைந்து வயிற்றைக் கழுவிக்கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட உதிர்த்த 'மஞ்சள் கடுதாசி'களை அதிகாரமிக்கவர்களும் அவைநடுங்கிகளும் இன்றைய அரசியலில் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

"நான் எதையும் பேசுவேன். எனக்கு என்ன இருக்கிறது. நான் மஞ்சள் கடுதாசி தானே! போன தேர்தலிலேயே நான் 'மஞ்சள் கடுதாசி'யாகி விட்டேனே!" என்று பேசும் மந்திரி பக்தவத்சலம் அந்த 'மஞ்சள் கடுதாசி'களில் முதல்வராவார். அவரை ஏவிவிடும் அவைநடுங்கிதான் பிரதமர் காமராஜர்.

★ கவிஞனும் காதலும் ★

கண்ணதாசன்

3

நாணம் காதலை வளர்க்கிறது என்பதால்தான் 'நாணிக்கண் புதைத்தல்' என்னும் துறையே உண்டாயிற்று. காதலுக்குப் படிகள் அமைத்து, எடுப்பு முதல் முடிப்புவரை பங்கிடு செய்து காட்டியவன் வள்ளுவன். தகையணங் குறுத்தல், குறிப்பறிதல், புணர்ச்சி மகிழ்தல், நலம்புனைந்துரைத்தல், காதற் சிறப்புரைத்தல், நாணுத்துறவுரைத்தல், அலர் அறிவுறுத்தல், பிரிவாற்றாமை, படர்மெலிந்திரங்கல், கண்விதுப்பழிதல், பசப்புறுபருவரல், தனிப்படர் மிகுதி, நினைந்தவர் புலம்பல், கனவுநிலை உரைத்தல், பொழுதுகண்டிரங்கல், உறுப்புநலன் அழிதல், நெஞ்சொடு கிளத்தல், நிறையழிதல், அவர்வயின் விதும்பல், குறிப்பறிவுறுத்தல், புணர்ச்சி விதும்பல், நெஞ்சொடு புலத்தல், புலவி, புலவி நுணுக்கம், ஊடலுவகை எனப் பகுக்கப்பட்ட வள்ளுவனது இன்பத்துப்பால் அகநூல் விதிப்படி அமைந்ததுதான் என்றாலும், எளிய இனிய முறையில் நமக்கு எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லுகிறது. கவிஞனது சிந்தனையிலே ஒழுங்கு இருக்கிறது. சொல்லவரும் கருத்திலே ஆழம் இருக்கிறது. சொல்லும் முறை நன்றாகப் படிகிறது. கவிஞன் இதயம் அனுபவத்தோடு பேசுகிறது. எந்த இடத்திலும் கவிஞனுக்கு ஐயம் தட்டவில்லை. இதற்கு விதி இதுதான் என்று உறுதியாக நம்புகிறான். முன்னிலைப் படுத்தப்பட்ட கதாநாயகிக்குப் பெயரில்லையென்றாலும் வடிவம் இருக்கிறது. ஒரே சீரான குணங்களை வழிநெடுகக் கொண்டு வந்திருப்பதால்தான் அந்த வடிவம் முழுமை பெறுகிறது. "அணங்குகொல், ஆய்மயில் கொல்லோ", என்று ஐயப்பாட்டோடு அழகைத் துவங்கிவைக்கும் கவிஞன், அவளை அணங்காகவும், ஆய்மயிலாகவும் கனங்குழை மாதின் வடிவத்தில் காட்டுகிறான். அவள் மனிதப் பெண்தான்; ஆனால், முன் இரு இலக்கணங்களையும் தன்னுடன் கொண்டவள் என்று ஒரே வடிவம் சமைக்கிறான். மனிதப் பண்புமிக்க மனிதப் பெண்ணாகவே அவளைக் கொண்டு வருகிறான். வாழ்க்கை நியாயத்தோடு, அவள் செயல்களை முறைப்படுத்துகிறான். கவி மிகைப்பாடுகூட ஒழுங்கோடு வருகிறது. இன்பத்துப் பாலை முழுக்கப் படித்ததும், நமது கற்பனை நியாயத்துக்கே ஒரு புது வடிவம் பிடிபடுகிறது. அதே வடிவம் தான் கவிஞனின் கண்முன்னாலும் நின்றது என்பதை நாம் உணருவதில்லை. தான் கற்பனை செய்கிற ஒரு வடிவத்தைக் கவிஞன் ஒழுங்காக விளங்க வைத்துவிட்டால், கவிதையைப் படிக்கிற எவனும், அதே வடிவத்தைக் கண்முன்னாலே காணுவான். சிக்குப்பிடித்த, நோய்பிடித்த, செயற்கைக் கவிதைகளிலே இது முழுமை பெறாது. பாடியவன் ஒரு வடிவத்தை நினைத்திருப்பான்; படிப்பவனுக்கு வேறு வடிவம் தெரியும். காரணம், பாடியவனுக்குக் கவி இதயம் இல்லை என்பதுதான்.

வள்ளுவனது கதாநாயகி நோக்கும்போது நாம் எதிர் நோக்கு நோக்கினால் அந்தக் கண்களிலேயிருந்து ஒரு சேனையே உருவாகிறது. அவ்வளவு அழகிய கண்கள். வெள்ளிய சுற்று விழிகளுக்கு நடுவிலே கன்னங்கரிய விழி காட்சி ஆகிறது. கலை உணர்வு கலந்த ஒரு ஆவேசச் சக்தி அதிலே தோற்றமளிக்கிறது. மைதீட்டப்பட்ட புருவம்-வடித்து வைத்தது போன்ற இமை காட்சியாகிறது. கவிஞனின் சிந்தனை அதற்குமேல் போயிருக்க முடியாது. நாமும் அதுவரைக்கு வந்துவிடுகிறோம். அவன் எந்த நிலையைப் பார்த்தானோ அதே நிலையை நாமும் பார்க்கிறோம். அவனுக்குத் தெரிந்த அதே கண் நமக்கும் தெரிகிறது. அப்படித் தெரியாமல் போய் விடுமோ என்பதற்காகத் தான் பாக்கிக் குறள்களிலே கவிஞன் துணை புரிகிறான். "பண்டறியேன் கூற்றென்பதனை, இனி அறிந்தேன்" என்கிறான். "கண்டார் உயிருண்ணும் தோற்றம்" என்கிறான். "கூற்றமோ, கண்ணோ, பிணையோ" என்கிறான். "புருவம் நேராக இருந்து மறைத்தால் துன்பம் இல்லையே" என்கிறான். ஆக, தன் கற்பனை வடிவத்தையே நமக்கும் காட்டிவிடுகிறான். இப்படி, ஒவ்வொரு அங்கத்தையும் தெளிவுபடுத்தி, படம் பிடித்து, அவள் செய்யும் செய்கைகளை முறைப்படுத்தி, அவள்பால் பெறக்கூடிய இன்பத்தை வகைப்படுத்தி, மொத்தமாக உருவம், செயல், முறை, இவற்றின்மூலம் நிழற்படம் பிடித்துத் தருகிறான். அவளது காதலனைக்கூட கண்முன்னால் காட்டுகிறான். "அந்தக் காதலன் நாமாக இருந்தால்...?" என்று எவனாவது ஒரு ரசிகன் ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டே வரும்போது, ஏதாவது ஒரு இலட்சணம் அந்த ரசிகனுக்குக் குறைந்துவிடுகிறது. அவனை மீறிய ஒரு கற்பனை வடிவம் கண்ணுக்கு முன்னால் நிற்கிறது. கவிஞனது கதாநாயகன் உன்னத இடத்தைப் பிடித்துக்கொள்ளுகிறான். கவிஞன் கற்பித்த வடிவம் பூர்த்தியாய்விடுகிறது.

இதுபோலவே, கம்பனின் சீதையும் முழு அங்க இலக்கணத்தோடு காட்சியாகிறாள். உருவத்தை ஒழுங்குபடுத்துவதில் கம்பன் தவறிவிடவில்லை. அவன் கண்ட சீதையையே நாமும் காண்கிறோம். மிகைப்பாட்டை உண்மை என்று நம்பும்போதுதான் வடிவம் கெடுகிறதேதவிர, நேரிய இலக்கணங்களில் சீதை ஒழுங்காகக் காட்சியாகிறாள்.

இழைகுலாம் முலையினாளை,
இடையுவா மதியின் நோக்கி,
மழைகுலா ஓதி நல்லார்
களிமயக் குற்று நின்றார்;
உழைகுலாம் நயனத்தார் மாட்டு
ஒன்றொன்றே விரும்பற்கு
ஒத்தது
அழகெலாம் ஒருங்கே கண்டால்
யாவரே ஆற்ற வல்லார்.

வல்லியை உயிர்த்தநில
மங்கைஇவள் பாதம்
மெல்லிய உறைக்கும்என
அஞ்சிவெளி எங்கும்
பல்லவ மலர்த்தொகை
பரப்பினள் எனத்தன்
நல்லணி மணிச்சுடர்
தவழ்ந்திட நடந்தாள்.

பொன்னின்ஒளி பூவின்வெறி
சாந்துபொதி சீதம்
மின்னின்எழில் அன்னவள்தன்
மேனியது மான
அன்னமும் அரம்பையரும்
ஆரமிழ்தும் நாண
மன்னவை இருந்தமணி
மண்டப மடைந்தாள்.

அழகெலாம் ஒருங்கே காணப்பட்டதாகக் கவிஞன் கூறுகிறான். அழகெலாம் என்றால், என்ன என்ன அழகுகள்? அவை எப்படி எப்படி இருக்கும்? இதற்கு விளக்கம் தெரிந்தால் தானே அவை எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்க்க முடியும்? இன்னின்ன அழகுகள் என்று கவிஞன் விளக்கம் தருகிறானா? இல்லை! தரவேண்டிய அவசியம் இல்லை என்று கூடக் கருதுகிறான். உலகத்தில் நாம் என்ன என்ன அழகுகளைக் காணுகிறோமோ, அவை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பார்க்கவேண்டும். மனித வாழ்க்கைக்கு மீறிப்போன அழகுகளைத் தவிர மற்றவற்றை எல்லோருமே பார்த்திருப்போம். அவை அனைத்தையும் ஒன்று சேர்த்துப் பார்க்கலாம். அல்லது, இதே கம்பன் முன் பகுதிகளில் சொன்ன அழகுகளைக் கோர்த்து எடுக்கலாம். இப்படிக் கோர்த்து எடுப்பதில் தவறிவிடாமல் இருந்தாலே, கம்பன் கண்ட சீதையை நாமும் காணமுடியும். இதில் சிரமமில்லை. உலக அழகுகளை விட்டு விடுவோம். கம்பன் சொன்னவற்றையே முறைப்படுத்துவோம். சீதை காட்சியாவாள். ஆனால், கவிமிகைப் பாட்டிலே அவன் மார்புக்கு மலையை உவமித்திருந்தால் அதை நாம் மலையாகவே எடுத்துக் கொள்ளக்கூடாது. நியாயமான எல்லை வகுக்கவேண்டும். கற்பனை உள்ளம் உள்ளவனுக்குத் தான் இந்த எல்லை பிடிபடும். அப்படி ஒவ்வொன்றாகப் பிடிபடும்போது சீதையின் உருவம் ஒழுங்காக வந்து நிற்கும். கவிஞனின் வெறிநிலையிலே தோன்றும் மிகைப்பாடு, கம்பனிடம் அதிகம் என்பதால்தான் படிப்பவனுக்கும் ஒரு கற்பனை உள்ளம் தேவைப்படுகிறது. இல்லையென்றால், வள்ளுவனிடம் கண்ட வடிவத்தைப்போல், சிரமமில்லாமலேயே ஒரு உருவத்தை இங்கேயும் கண்டுவிடலாம். என்றாலும், மிகைப்பாடு இல்லாத பல கவிதைகளின்மூலம், சீதையை நாம் கண் முன்னாலே காணுமாறு விட்டு வைத்திருக்கிறான் கம்பன். ஆம்! அவன் கண்டதையே நாமும் காணுகிறோம்.

இனி, இளங்கோவைப் பார்ப்போம். அவன் ஒரு விசித்திரமான கவிஞன். துன்பநிலையிலிருக்கும் கண்ணகியை மிக ஒழுங்கு முறையோடு காட்டுவதன்மூலம், அழகு நிலையில் அவள் எப்படி இருந்திருப்பாள், என்ற கற்பனையைச் சாதாரண மனிதனுக்கும் தந்துவிடுகிறான்.

(வரும்)

'மாவட்டம்' கண்டார்! மாநிலம்?

மாவட்டங்களைத் திருத்தியமைப்பது பற்றி அமைச்சர்கள் சென்றவாரம் கூடிப் பேசியிருக்கிறார்கள். அப்போது காமராஜர் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார். "ஜில்லாக்கள் சிறியதாக இருந்தால்தான் நிர்வாகம் திறம்பட நடைபெற முடியும்" என்று அவர் சொல்லியிருக்கிறார். இந்தக் கருத்து நமக்கு உடன்பாடான கருத்துத்தான். தெரிந்தோ தெரியாமலோ காமராசர் ஒரு உண்மையைக் கண்டு பிடித்துச் சொன்னமைக்காக நாம் மகிழ்கிறோம். அதே நேரத்தில் அவருடைய கவனத்திற்கு ஒரு செய்தியைக் கொண்டு வருகிறோம். மாவட்டங்களைப் பொறுத்த வரையில் நிர்வாகத் திறமைக்காக என்ன மாற்றத்தைச் செய்யக் காமராசர் விரும்புகிறாரோ, அந்த மாற்றத்தைத்தான் நாட்டைப் பொறுத்தவரையிலும் கொள்ளல் வேண்டுமென்பதை காமராசர் ஆய்ந்து பார்க்கவேண்டும்.

தலைநகரம் டில்லி வடகோடியிலிருக்கிறது. நாம் தென்கோடியிலிருக்கிறோம். ஒரு நாட்டின் பரப்பளவு குறுகிய அளவினதாக இருந்தால்தான் நிர்வாகம் செவ்வனே நடைபெற இயலும்-என்பதைத்தான் தி. மு. கழகம் வலியுறுத்தி வருகிறது. அதனால் திராவிடநாடு தனி நாடாக வேண்டுமென்றும் கூறி வருகிறது. புதுப்புது மாவட்டங்களைக் காணப்போகும் காமராசர், ஏன் தாயத் திருநாட்டைப் புதுப் பொலிவுடன் காணத் தயங்கவேண்டும்!

பாரசீகப் பேரழகி!

நயே பைசா நாணயம் நடைமுறையில் வந்துகொண்டிருக்கும் நாடும்' நாணயம் மிகுந்த மன்னர்கள் செங்கோல் ஏந்தி செம்மையாக ஆட்சி புரிந்த நாடும் இந்நாடே!

மௌரியர் காலம் முதல் மவுன்ட் பேட்டன் காலம் முடிய நம் பண்பை அடக்கி ஆண்ட மன்னர்கள், வரலாற்று ஏட்டில் அதிக பக்கங்களை பிடித்துக்கொண்டார்கள்.

மொகலாய மன்னர் - ஆனால் சமநெறி கொண்டவர் - சிறந்த சீர்திருத்தவாதி. தான் விரும்பிய மாதை மனைவியாகப் பெற்றவர். அவர்தான் அக்பர் பாதுஷா!

'அண்ணாவி செய்தால் குற்றம் இல்லை. ஆனால் பள்ளிப்பிள்ளை செய்தால் குற்றம்' என்பார்கள். அதற்கு இலக்கானவர் நம் மதிப்பிற்குரிய பாதுஷா அவர்கள். மன்னர் விரும்பிய பெண்ணை மாலையிட்டார்-மனைவியாக ஏற்றுக்கொண்டார். வரவேற்றன வரலாற்று ஏடுகள். நாடும் நகரமும் போற்றின. அண்ணாவியான பாதுஷா செய்த குற்றத்தை பிள்ளையாகிய சலீம் செய்தான். நடனமாது அனாரின் மேல் வளம் முறையா அன்பு கொண்டான். மொகல் மன்னர் இரஜபுத்திரப் பெண்ணை மணந்தது குற்றம் இல்லை. ஆனால் அவர் பெற்ற செல்வன் நடனமாதைக் காதலித்தது குற்றம் எனக் கூறினார் மன்னர். இது குற்றம் எனக் கண்டு அதை எடுத்துக் கூறியது மன்னர் செய்த மாபெரும் குற்றம். அதுதான் போகட்டும்! தன் மைந்தன் ஜஹாங்கீர் பாட்சா பாரசீகப் பெண்ணை நேசிக்கிறான் என்று தெரிந்த மகுடபதி, மருமகளாக வரவேண்டிய மிகிர்-உன்னிசாவை மாற்றானின் மனைவியாக மணம் முடித்துவைக்க முன் வந்தார். மன்னர் ஜோதிபாயை மணந்தது குற்றம் இல்லை. ஆனால் அவர் மகன் அவன் விரும்பிய பெண்ணை மணந்து கொள்ள நினைத்தது குற்றம். இப்படித்தான் அக்பரின் ஆட்சிபீடம் ஒலித்து வந்தது அப்போது!

தந்தை வாலிபப் பருவத்தில் ஒரு பெண்ணை மணக்க ஆசைப்பட்டார். மகனும் அதே பருவத்தில் வேறு ஒரு பெண்ணை மணக்கப் பிரியப்பட்டார். தகப்பன் விரும்பிய பெண் இரஜபுத்திர வம்சத்தில் வாழ்ந்தவள். தனயன் விரும்பிய பெண் பாரசீகக் குடும்பத்தில் வளர்ந்தவள். மன்னராய் இருந்த காரணத்தால் விரும்பியப் பொருள் கைக் கெட்டியது. இளவரசனாய் இருந்த காரணத்தால் விரும்பிய பொருள் கைமாறியது. தந்தை எவ்வழியோ தனயனும் அவ்வழியே என்பதை மன்னர் மறந்தே போய்விட்டார்.

இளவரசன் ஜஹாங்கீர் எந்த ஓவியத்தைக் கனவிலும் நினைவிலும் கண்டானோ அந்தக் கலையரசியை சேனைத்தலைவன் ஷெர்ஹான் தலையில் கட்டிவிடுவது எனத் தீர்மானித்தார் மகுடபதி. மன்னர் ஆணையிட்டார். அரசரின் ஆணை! அதற்கு மறுமொழி கூறுபவர்கள் அங்கு யாருமே இல்லை.

மாளிகையில் மன்னனின் மகனாய் பிறப்பதைவிட மண் குடிசையில் ஏழையின் செல்வனாய் பிறந்திருந்தால் சுயேச்சைக் கிளியாக, ஜோடி புறாக்களாக வாழ்ந்திருக்கலாம் என்று எண்ணியது அவன் தவறல்ல! பிறப்பிலே, இயற்கை செய்து முடித்த தவறு அது. தாதிமார்கள் தாலாட்டினபோது சோலைவனமாக இருந்த வாழ்வு, வாலிபப் பருவத்தில் வறண்ட பாலைவனமாகக் காட்சி அளித்தது இளவரசர்க்கு!

உன்னிசா நின்றால் தோகை மயில். நடந்தால் அசைந்தாடும் முல்லைக் கொடி. யாராலும் செதுக்கப்படாத அபூர்வமான பளிங்குச் சிலை அவள். தந்தை சொல் தவறாத தவப் புதல்வி. தந்தை மெஹருன்னிசாவுடன் வியாபாரத்தின் பொருட்டு அக்பரின் அரண்மனை வந்தவள். இளவரசன் ஜஹாங்கீர் கண்களில் பட்டாள். உள்ளத்திலே உள்ள காந்த சக்தி கண்களின் மூலம் ஒன்று சேர ஆரம்பித்தன. பாசக் கயிற்றால் காதல் ஏணி ஏறினார்கள். செய்தி கேட்ட மன்னரின் மனம் கோபத்தால் பொங்கி எழுந்தது. உன்னிஸாவின் தந்தையை அழைத்து வரச்சொன்னார். பாரசீக வியாபாரியும் வந்தார். மன்னர் தன் ஆணை இதென்றார். வியாபாரியிடம் உறுதிமொழி வாங்கினார். மன்னரின் ஆணையை சுமந்து சென்ற தந்தை மகளிடம் சென்றார். மன்னரின் ஆணை இதென்று மகளிடம் சொன்னார் தந்தை! தந்தை அன்பிற்கு அடி பணிந்த மகள், தன்னை நம்பிய இளவரசனை கைவிட்டாள். தந்தையின் ஆணைப்படி மாற்றானை மணந்து கொண்டாள்.

மாரி காலங்கள் சில கழிந்தன. இளவரசன் உள்ளத்தில் பதிந்திருந்த மதிமுகம் மறையவில்லை. இப்போது அவள், மாற்றான் ஒருவனின் மனைவி என்பதை இளவரசன் நன்குணர்வான். அவளைப்பற்றி நினைப்பதுகூடத் தவறு என்பதையும் அவன் அறியாமல் இல்லை. ஆனால் அவள் எழில்நிறை வதனத்தில் உள்ள மச்சம், இப்போதும் அவளை மாலையிட்டு மனைவியாக ஏற்றுக்கொள்ள இவன் உள்ளம் இன்றைய சூயஸ் கால்வாயைப் போன்று திறந்து இருந்தது.

சூழ்நிலையும், சந்தர்ப்பமும் கிடைக்கும்போது நாகம் முத்தை வெளிப்படுத்தியே தீரும். மன்னர் மகுடபதி மாண்டார். இளவரசன் ஜஹாங்கீர் மகுடபதியானார். மக்களிடம் அன்புகொண்ட வேந்தன், மக்கள் நலனே தன் நலன் என வாழ்ந்து வந்த மன்னன் மனதிலே உள்ள உற்சாகக் குறைவு, உள்ளத்திலே உள்ள களங்கம் நாளுக்கு நாள் ஆணி வேர் விட்டு வளர ஆரம்பித்தது.

கபூலிலே கலகம் ஏற்பட்ட நேரம் அது. சேனைத் தலைவன் ஷெர்ஹான் கலகத்தை அடக்கும் வீரனாகச் சென்றான். பகைவர் ஈட்டி பாய்ந்ததோ, அல்லது உடன் பிறந்து கொல்லும் வியாதி தோன்றியதோ ஷெர்ஹான் போர்க்களத்திலேயே வீரமரணம் அடைந்தான். மாலையிட்டவன் மாண்டான் என்ற செய்தி கேட்ட மங்கை துடித்தாள்! துவண்டாள்!! அழுதாள்!!!

ஜஹாங்கீர் பாதுஷா நாட்டு முறைப்படி அவையைக் கூட்டினான். கணவனை இழந்த காரிகைக்கு அனுதாபம் தெரிவிப்பதும், அவள் விரும்பினால் அவளுக்குப் புதுவாழ்வு அளிப்பது என்பதும் அப்போது கூடவிருந்த அவையின் நோக்கமாகும். மன்னன் வேண்டுகோள்படி மக்கள் கூடினார்கள். மக்களின் சார்பாக மாண்டவனின் மனைவிக்கு தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தான். சில வினாடிகளில் மன்னன் பேசினான்.

"மொகல் சாம்ராஜ்யத்தின் வருங்கால வீராதி வீரர்களே! நாட்டின் நலனே நம் நலன் என விரும்பும் நல்குடி மக்களே! நம் நாட்டில் அல்லல்படுவோர் அறவே அழியவேண்டும். இன்பம் பொங்கவேண்டும். இங்கே! ஒரு கைம்பெண் கணவனை இழந்து அவதிப்படுகிறாள் வாழவேண்டிய மலர் வாடுகிறது. இவளைப்போன்ற பெண்களுக்கு வாழ் வழி வகுத்துக் கொடுப்பது பொறுப்புள்ள அரசாங்கத்தின் கடமை. இக் கடமையை நிறைவேற்ற கண்ணியமுள்ள, கடமை தவறாத, விவேகமுள்ள வாலிபர்கள் முன்வருவார்களேயானால் அதுவே அவர்கள் பிறந்த தாய் நாட்டிற்கு அவர்கள் செய்யும் சேவையும் தியாகமுமாகும். இங்கே நான் இன்று குறிப்பிடும் பெண்ணின் பெயர் மிகிர்-உன்-னிசா-மாண்டுபோன நாம் சேனாதிபதி ஷெர்ஹானின் மனைவி. நாட்டின் நலம் நாடுவோர் முன் வாருங்கள். இப்பெண்ணை ஏற்று இல்லறம் நடத்துங்கள். ஆனால் ஒன்று! நம் நாட்டு சட்டப்படி இவளை ஏற்றுக்கொண்டபின், இவள் ஏற்றுக் கொண்டவனின் இல்லாள். இல்லாள் ஒருவேளை நடத்தவேண்டிய முறை தவறி நடத்தினால் அவர்களின் மாறுகால் மாறுகை வாங்கப்படும். இப்படிப்பட்ட மங்கையர்களை ஏற்றுக்கொண்டவர்களையும், ஏற்றுக் கொள்ளப் போகிறவர்களையும் நான் என்றும் மறவேன். (சிறிது நேரம் கழித்து) யாரும் ஏற்றுக்கொள்ளாத ஒரு பொருளை ஏற்றுக் கொள்ளும் குணம் இயற்கைக்குத்தான் உண்டு. இயற்கை எழில் பொங்கும் இந்நாட்டை ஆளும் நான் இப்பெண்ணை ஏற்றுக்கொள்கிறேன்" என்ற நீண்ட இடைவேளைக்குப் பின் பழைய காதலியை தன் புதுமுக மனைவியாக ஏற்றுக்கொள்கிறார் ஜஹாங்கீர் பாதுஷா!

ஆசிய ஜோதி வாழ்கின்ற நாட்டில் மொகலாயர் காலத்தில் ஒரு உலக ஜோதியே வாழ்ந்திருக்கிறாள். அழகிலும், அன்பிலும், பண்பிலும், நாணயத்திலும் சிறந்து விளங்கிய அவளை அந்நாட்டு மக்கள் உலக ஜோதி என்னும் பொருள்பட நூர்ஜஹான் என்று அழைத்தார்கள். மன்னர் மதிமயங்கிய நேரத்தில் ஆட்சியை அவளே நடத்தினாள். அப்போது அவள் நாணயமும் வெளியிட்டாள். நாணயமாகவும் ஆட்சி செய்தாள். நயே பைசா வந்துகொண்டிருக்கும் நாட்டில் நாணயமான ஆட்சிமூலம் உலக ஜோதி உன்-னிசா, பாதுஷாவின் காதல் சாம்ராஜ்யத்தில் நூர்ஜஹான் என்ற புனைப்பெயரையும் பெற்று வாழ்ந்தாள்!

— ஆலகாலன்.

ஜூலை 13ம் தேதியிலிருந்து

தென்றல்

வெண்பாப் போட்டி,

கேள்வி பதில், தொடர் கதை

மற்றும் பல புதிய அம்சங்களுடன்

பனிரெண்டு பக்கங்களாக வெளிவரும்.

விலை 0-2-6

முல்லை

மே இதழில்

★ ஆசிரியர் கண்ணதாசனின்

கவிதை & பாரதியும் பாரதிதாசனும்

★ பன்மொழிப் புலவர் எழுதும்

"இல்லறமே பேரின்பம்"

மற்றும் பல புதிய அம்சங்கள் உண்டு.

★

மே இரண்டாவது வாரத்தில் எங்கும் கிடைக்கும்.

★

தனி இதழ் 4 அணா

★

முல்லை, சென்னை-6.

குறிப்பு:—ஏப்ரல் பாக்கியை 10ம் தேதிக்குள் கிடைக்கும்படி அனுப்பாதவர்களுக்கு மே முல்லை அனுப்பப்படமாட்டாது.

சிரிப்புத்தான் வருகுதைய்யா!



புதிய சட்டசபைக் கூட்டம் ஆரம்பமாகிவிட்டது. எல்லா எம். எல். ஏக்களும் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டுவிட்டனர். திக்கல்திணறல், விக்கல் விம்மல், முக்கல் முனகல் காங்கிரசு உறுப்பினர்களும் 'படித்து' விட்டனர். சபாநாயகர் தேர்தல் முடிந்து புதிய சபாநாயகரை எல்லோரும் பாராட்டிப் பேசிவிட்டனர்.

இதில் முதல் நாளிலேயே தான் யார் என்பதை நிரூபித்துவிட்டார் அறிஞர் அண்ணா. ஒவ்வொரு காங்கிரசு உறுப்பினரும் அவர் பேச்சைக் கூர்ந்து கேட்டனர். வரிக்குவரி உவமையோடு, குறிப்பிட்ட நேரத்துக்குள் கச்சிதமாக முடித்து 'சபாஷ்' பெற்ருர். இதைக் கவனித்த மந்திரிகள் சிலருக்கு மூச்சே வரவில்லை.

"பொதுமேடையல்ல சட்டசபை" என்று உளறல் புராணம் பாடினர்களே, காங்கிரசுக்காரர்கள், அவர்களைக் கேளுங்கள்! "பொதுமேடையில் பேசுவது மாதிரியா அவர் அங்கே பேசினர்?"-என்னமோ பத்து வருடகாலம் சட்டசபைக்குள் இருந்துவிட்டதால், தங்களுக்குத்தான் சட்டமன்ற ஞானோதயம் கிளம்பிவிட்டதாக, காங்கிரசு மாடுகள் (இது சின்னத்தைக் குறிக்கும்) உளறிக்கொட்டின. அதுகளை மூக்கைப் பிடித்துக் கயிறு போட்டு, முதல் இழுப்பிலேயே தட்டிவிட்டார் அண்ணா!

★

'தினமணி'யில் ஒரு படம் வந்தது. அண்ணா, பதவிப் பிரமாணம் எடுக்கிருர். காமராசர் கூர்ந்து கவனிக்கிருர். அப்போது அவர் முகத்தைக் கவனித்தீர்களா? "உம்"மென்று இருக்கிறது. பாவம் பேசுகிறது; பரிதாபமாகத் தோன்றுகிறது. "இந்தப் பயல் எதிரே வந்துவிட்டானே!" என்கிறது. "என்ன பாடுபடுத்துவானே!" என்று கேட்கிறது. நவரசமும் நர்த்தனம்! பின்னலே உட்கார்ந்திருக்கிருர், 'உலக மகா யோக்கியர், முத்தையா செட்டி! அவர் 'மூஞ்சி'யும் விம்முகிறது. "ராசாதி ராசர்கள் ஆண்டவிடம் ஆவதிப்பட வேண்டியிருக்கிறதே" என்று பேசுவது போல் தோன்றுகிறது. கொற்றமின்றிக் குடையின்றி, குடியின்றி, முடியின்றி ராசாப் பட்டம் வாங்கியதுபோல், மக்கள் அபிமானமின்றி மதிப்பின்றி, பணம் கொடுத்து எம். எல். ஏயான 'ராசா', பொத்தான் போடாத சட்டையைக் கண்டு பொருமுகிருர். பொறுங்கள்! போகப் போகத்தான் இருக்கிறது, வேடிக்கை!

★

"இளைத்தவர்களைக் கைதூக்கிவிடும் மருத்துவராக நீங்கள் விளங்கவேண்டும்" என்று சபாநாயகரைப் பாராட்டும்போது அண்ணா சொன்ஞரல்லவா? அதற்குப் பதில் சொல்லிவிட்டார், நிதியமைச்சர்! ஆகா! என்ன பதில்! என்ன பதில்! இந்தப் பதிலுக்கு காங்கிரசு உறுப்பினர்கள் கைதட்டினர்களாம்! அதில் அவ்வளவு சுவையிருந்தது! என்ன சொன்னர்? "எங்களை கவனியுங்கள்" என்ருர் - இவ்வளவுதான். கைதட்டலின் உண்மை என்ன தெரியுமா!

"கைதட்டுகிற மாதிரி பேச, சுப்பிரமணியத்துக்குத் தெரியாது. அதனல், சுப்பிரமணியம் பேசுகிறபோதெல்லாம் கைதட்டுவது" என்று காங்கிரசுக்காரர்கள் முடிவு செய்துவிட்டார்கள்! இனி, "நான் ஒரு மனிதன்" என்று சுப்பிரமணியம் சொன்னல், காங்கிரசுக்காரர்கள் கைதட்டுவார்கள். அப்போதுதான் அவரைப் பற்றிப் புரிந்தது என்பதற்காக அல்ல; கைதட்ட வேண்டுமே என்பதற்காக. இது மாதிரி............

"பாரதமாதா ஒருத்தனுக்குத்தான் பிறந்தாள்" என்று சுப்பிரமணியம் சொன்னல்......கைதட்டல்!

"அமாவாசையில் பிறந்ததால் ஒருவன் இந்தி பேசுகிருன்" (கைதட்டல்)

"பௌர்ணமியில் பிறந்ததால் ஒருவன் தமிழ் பேசுகிருன்"(கைதட்டல்)

இப்படி அவர் வாய்தட்ட, காங்கிரசுக்காரர்கள் கைதட்ட, சபாநாயகர் மணி தட்ட...நாளுக்கு நாள் காங்கிரசின் கால்கள 'முட்டிதட்டும்'!

★

"எங்கே சார் பக்தவத்சலம்?"

"சிலையைத் தேடிப் போயிருக்கிருர்."

"அட, விளையாடாமல் விஷயத்தைச் சொல்லுமையா!"

'பின்னே என்னையா கேள்வி! அவர் கடற்கரையில் முழக்கு முழக்கென்று முழக்கியிருக்கிருர். எங்கே என்று கேட்கிறீரே!"

"முழக்கிவிட்டு..?"

"அப்படியே கடலைத் தாண்டி..."

"உஸ்...சொல்லுமையா."

"முழக்கிவிட்டுத் திரும்பினர். என்ன சொன்னர் தெரியுமோ? "தி. மு. கவினர் அரசியலில் குழந்தைகள். ஞானசூன்யங்கள். நான் அவர்களுக்கு அரசியல்வாதிகள் என்ற மதிப்புக் கொடுக்கமாட்டேன்" என்ருர்......"

"அரசியல்வாதி எப்படியிருக்க வேண்டுமாம்?"

"யார் வந்தாலும் படுக்கை விரித்து, தப்பாமல் தவருமல் மந்திரியாக வேண்டும். கைநீட்டி லட்சம் வாங்கவேண்டும். பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, யாருடைய பாதங்களை வேண்டுமானலும் நாக்கால் கழுவத் தயாராகவேண்டும்!"

"இது...?"

"கௌடில்யரின் அர்த்த சாத்திரம், மாக்கியவல்லியின் ராசதந்திரம் மாதிரி, "ப. வ. அரசியல்."

"ப. வ. அரசியல்!...நல்ல பெயர்தான். ஆமாம் டி. டி. கே. கூட அன்று கடற்கரையில்..."

"வெளுத்துவிட்டார். திருவல்லிக்கேணி; தி. நகர் பகுதிகளில் அவர் ஓட்டு வாங்குவதற்கே சுமார் 700 காலன் சாராயம் செலவாகியிருக்கிறதென்ருல், பேச்சுக்கு என்னையா குறை! நாமெல்லாம் இருந்து என்ன பயன்? டி. டி. கேக்கு உழைத்த காங்கிரசுக்காரர்கள் அதிட்டக்காரர்கள்! ஒவ்வொரு ஓட்டரும் அவர்கள் கண்ணுக்கு இரண்டாகத் தெரிந்தார்களாம். அதனல், மொத்த ஓட்டுக்களைப் போல் இரண்டு மடங்கு 'போலா'கும் என்று டி. டி. கே. கருதிஞராம். அவருக்கு ஓட்டுப் போட்டவர்கள் யாவரும், நன்றி மறவாமல் தாங்களும் வரியை சாராயமாகவே செலுத்திவிட இருக்கிருர்களாம்!"

"அவர்கள் போகட்டுமையா! கடற்கரையில் என்ன பேசினர், அதைச் சொல்லும்!"

"என்ன பேசுவார்! வழக்கம் போல, 'தி. மு. கழகத்தை ஒழிக்க வேண்டும்' என்ருராம்."

"அப்படியா சொன்னர் அவர்..."

"உஸ்! அப்படியெல்லாம் சொல்லாதீர். அவர் ரொம்ப நல்லவர். நாளைக்கு நாமே பதவிக்கு வந்துவிட்டால், கால் கழுவ நீரும், கை கழுவப் பன்னீரும் மேல்துலக்க வெந்நீரும், சோப்பும் கொண்டுவந்து உடம்பு தேய்த்துவிடுவார். அவரைக் காங்கிரசுக்காரர் என்று கருதிப் பேசாதீர். ஆளுங்கட்சிக்காரர்; அவ்வளவுதான்!"

"அவர் நிதி மந்திரி..."

"ஆமாம்; இனி டி. வி. சுந்தரமையங்கார் கம்பெனி, கோத்தாரி அன் சன்ஸ் இதுக்கெல்லாம் யோகந்தான். அது மட்டுமல்ல...கோயங்கா..."

"தெரியும்! தெரியும்!"

"என்ன தெரியும்?"

"அதுதான்.....மியூசியத்துக்கு வந்திருக்கிறதே புது வகைக் காண்டாமிருகம்."

"சீச்சி! நான் சொல்வது தினமணி கோயங்காவை! இது உருவத்தில் மனித சாதி. ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு வடிவம் எடுக்கும். அதுக்கும் யோகந்தான்! டி. டி. கே. வென்ருரோ இல்லையோ பணக்காரன் பிழைத்தான்!"

"இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது?"

"ஏழைகளுக்காக உழைக்கும் கட்சி, காங்கிரசுக்கட்சி! அதாவது காங்கிரசிலுள்ள ஏழைகளுக்காக!"

"வாழ்க பணநாயகம்! வந்து ஏமாத்தரேும்!"

★

காங்கிரசுப் பெண் உறுப்பினர்கள், கடற்கரையில் செந்தமிழில் பேசினர்களாம். நிதியமைச்சர் சொக்கிப் போனராம்! "இவர்கள் போதுமே!" என்ருராம். இதைப் பற்றி நமது பையன் கூறும் கருத்து, பின்வருமாறு:

"அந்தப் பெண்களை மந்திரிகளாக்கிவிடலாம். சுப்ரமணியம் கூட்டுவைக்க, காமராசர், சோறு சமைக்க, கக்கன் பரிமாறலாம்!"

நான் கேட்டேன்: "அவர்கள் சமைத்தால் யார் சாப்பிடுவது?"

"மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள்! தூக்குப்போடும் சிரமம் குறையுமல்லவா?" என்ருன் அவன்!

★

புதிய காங்கிரசுக்காரர்களுக்கு, கீழ்க்கண்ட பெயரை, நமது பேச்சாளர் ஒருவர் சிபாரிசு செய்கிருர்:

"நயா காங்கிரஸ்."

-வணங்காமுடி.

நாஞ்சில் மனேகரன்

சென்னை அரசாங்கத் தீவிரப் போக்கு வரத்துப் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் நிர்வாகக் குழுவின் அவசரக் கூட்டம் சங்க அலுவலகத்தில் சங்கத்தின் துணைத் தலைவர் தோழர் ஜி. இராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் 14-4-'57ல் நடைபெற்றது. அப்போது தோழர் நாஞ்சில் கி. மனேகரன், எம். ஏ. அவர்கள் சென்னை அரசாங்க தீவிரப் போக்குவரத்துப் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இச்சங்கத்திற்கு இதுவரையில் சென்னை நகராண்மைக் கழக முன்னள் தலைவர் தோழர் எம். இராதாகிருஷ்ண பிள்ளை, பி. ஏ., பி. எல். அவர்கள் தலைவராக இருந்து வந்தார்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.